No. of Printed Pages : 7

812846

**4601**

பதிவு எண் | | | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

(செய்யுள், உரைநடை)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

அறிவுரை : (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பு - (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைத்தல் வேண்டும்.

(ii) வினா எண் 49 -விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைத்தல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6x1=6**

1. திருக்குறள் _________ வெண்பாக்களால் ஆன நூலாகும்.

(அ) சிந்தியல் (ஆ) குறள் (இ) நேரிசை

2. குடும்ப விளக்கு யார் படைப்புகளுள் ஒன்று?

(அ) பாரதிதாசன் (ஆ) பாரதியார் (இ) சுரதா

3. பணை என்னும் சொல்லின் பொருள்

(அ) அரசு (ஆ) ஆல் (இ) மூங்கில்

[ திருப்புக

4. வள்ளலாரின் இயற்பெயர்
   (அ) சம்பந்தர் (ஆ) இராமலிங்கர் (இ) தாயுமானவர்

5. தமிழ்த் தென்றல் எனச் சிறப்பிக்கப்படுபவர்
   (அ) பேரறிஞர் அண்ணா (ஆ) மு.வரதராசனார் (இ) திரு. வி.க

6. 'உலகம்' என்னும் தமிழ்ச்சொல் __________ என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது.
   (அ) உலகு (ஆ) உலவு (இ) உளது

பகுதி - 2

கோடிட்ட இடத்தை நிரப்புக : 6x1=6

7. தாண்டக வேந்தர் என அழைக்கப்படுபவர் _________.

8. போலிப்புலவர்களைத் தலையில் குட்டுபவர் _________.

9. உலகத்தமிழ் ஆராய்ச்சிக்கழகம் தோன்றக் காரணமானவர் _________.

10. குமரிக் கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி _________.

11. பெரியார் சமூக முரண்களையும் _________ எதிர்த்தவர்.

12. இயங்குருப் படங்கள் பார்ப்பதற்கு _________ இருக்கும்.

பகுதி - 3

பொருத்துக : 4x1=4

13. மடங்கல் - தலைவன்

14. மேதி - விதை

15. இறை - சிங்கம்

16. வித்து - எருமை

பகுதி - 4

விடைகேற்ற வினா அமைக்க : **4x1=4**

17. காந்தியடிகள், பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று கருதினார்.

18. தமிழர்கள் அரபு நாட்டுடனும், யவன நாட்டுடனும் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தார்கள்.

19. இளங்கலைப்பட்டம் பெற்றவர்கள், இளங்கலைக் கல்வியில் பட்டம் பெற்றிருந்தால் பட்டதாரி ஆசிரியர் பணியில் சேரலாம்.

20. எல்லா மனிதர்களையும் ஒரே மாதிரியாக நடத்துவதே சமத்துவமாகும்.

பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தனுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. **5x2=10**

21. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது?

22. ஏலாதி - நூற்குறிப்பு எழுதுக.

23. குகனின் வேண்டுகோள் யாது?

24. அப்பூதியடிகள் எத்தகைய பண்பாளர்?

25. போலிப்புலவர்களைத் தண்டிப்போர் யாவர்?

26. தேவாரம் - பொருள் எழுதுக.

27. கலம்பக உறுப்புகள் நான்கனை எழுதுக.

[ திருப்புக

## பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் ஐந்தனுக்கு மூன்று** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க 5x2=10

28. தொல்காப்பியம் குறித்து முனைவர் எமினோ கூறுவது யாது?

29. கொடுங்கடலால் கொள்ளப்பட்ட தமிழகப் பகுதிகள் யாவை?

30. காந்தியடிகள் எதனைப் பாவம் என்கிறார்?

31. மொழிமாற்றம் என்றால் என்ன?

32. கண்ணிடந்து அப்பியவர் யார்? அவர் வரலாறு உணர்த்தும் செய்தி யாது?

33. வளரும் பிள்ளைகளுக்கு இராமலிங்கர் வழங்கிய அறிவுரைகளுள் இரண்டனைக் கூறுக.

34. தற்போது வளர்ந்து வரும் இரண்டு தொழில்நுட்பத் துறைகள் யாவை?

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

## பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க 3x4=12

35. தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழிவகைகள் யாவை?

36. கம்பராமாயணம் - சிறு குறிப்பு எழுதுக.

37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?

38. 'சாதனைப் பூக்கள்' என்று எவற்றை இளந்திரையன் சுட்டுகிறார்?

39. புலியின் கொடுஞ்செயல்கள் பற்றி உமறுப்புலவர் கூறுவன யாவை?

பகுதி - 2

கீழ்க்காணும் வினாக்களுள் **எவையேனும் மூன்றனுக்கு ஆறு** வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க 3x4=12

40. மணக்கொடை குறித்துப் பெரியார் கூறுவன யாவை?

41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?

42. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றை எழுதுக.

43. உழவுத்தொழில் குறித்து எழுதுக.

44. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது?

பிரிவு - IV

(மதிப்பெண்கள் : 10)

45. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

ஆற்றுதல் என்பதுஒன்று அலந்தவர்க்கு உதவுதல்
போற்றுதல் என்பது புணர்ந்தாரைப் பிரியாமை
பண்பெனப் படுவது பாடுஅறிந்து ஒழுகுதல்
அன்பெனப் படுவது தன்கிளை செறாஅமை

(i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?

(ii) ஆற்றுதல் என்பது எது?

(iii) ஒழுகுதல் - இலக்கணக்குறிப்பு தருக.

(iv) பண்பெனப்படுவது - பிரித்து எழுதுக.

(v) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி, எதுகைகளை எடுத்தெழுதுக.

[ திருப்புக

46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க : 5

'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்' என்பார் திருமூலர். உடலை ஓம்ப வேண்டியதன் இன்றியமையாமையைத் தமிழர் அறிந்திருந்தனர்.

திருவள்ளுவர் 'மருந்து' என்னும் ஓர் அதிகாரத்தையே படைத்துள்ளார். உடல் உறுதியாய் இருப்பதற்கு வாதம், பித்தம், சீதம் இம்மூன்றின் சமநிலையே காரணமாகும். அவற்றின் சமநிலை தவறும்போது நோய்மிகும்.

அவற்றைச் சமப்படுத்த இயற்கை தரும் காய்கனிகளிலிருந்தே மருந்து கண்டு உண்டனர்.

'மருந்தாகித் தப்பா மரத்தற்றால்' என்றும் திருக்குறள் வரி, தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்தியம்பும். பதினெண்சித்தர்கள் வளர்த்த மருத்துவம் சித்த மருத்துவமாயிற்று.

(i) உடல் உறுதியாய் இருப்பதற்கு எவை காரணமாகும்?

(ii) தமிழ் மருத்துவத்தின் தொன்மையை எடுத்து இயம்புவது எது?

(iii) 'உடம்பார் அழியின் உயிரார் அழிவார்' என்று கூறியவர் யார்?

(iv) தமிழர் இயற்கை தரும் காய்கனிகளிலிருந்து எது கண்டு உண்டனர்?

(v) பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் எது?

## பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

### பகுதி - 1

கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு** மிகாமல் விடையளிக்க : 2x8=16

47. (அ) "தேரா மன்னா" என விளித்துக் கண்ணகி கூறியன யாவை?

அல்லது

(ஆ) பொருள் செயல்வகை என்னும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறும் வளமார்ந்த கருத்துக்களைத் தொகுத்து எழுதுக.

48. (அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக.

அல்லது

(ஆ) கலை அறிவியல் கல்வி, சிறு தொழில் கல்வி குறித்து விவரிக்க.

பகுதி - 2

49. செய்யுள் வடிவில் விடை தருக : 2+2+3+3=10

(அ) 'அருவினை' எனத் தொடங்கும் குறள்.

(ஆ) 'கெடும்' - என முடியும் குறள்.

(இ) 'நல்லதாய்' - எனத் தொடங்கும் பெரிய புராணப் பாடல்.

(ஈ) 'மீன்நோக்கும்' - எனத் தொடங்கும் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தப் பாடல்.

-o0o-